REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 19உ சனி (5—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 20உ ஞாயிறு (6—10—57) [இதழ் 97

இந்தியாவில் கல்விச் செலவு!

1948-ம் ஆண்டில் ரூ. 55·1 கோடி மட்டுமே கல்விக்காக இந்தியாவில் செலவிடப்பட்டது என்றும், 1956-ம் ஆண்டில் ரூ. 189·4 கோடி செலவிடப்பட்டிருப்பதாகவும் ஒரு கணக்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகை, மத்திய மாநில சர்க்கார்கள், மற்றும் தனிப்பட்டவர்கள் அனைவருமாகச் சேர்ந்து செலவிடப்பட்டதாகுமாம்.

1956—57-ம் ஆண்டில் மட்டும், தேசியப் 'பட்ஜெட்'டில் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பது 12·3 சதவிகிதம் என்றும், முதல் திட்ட காலத்தில் இது 7 சதவிகிதமாகமட்டுமே இருந்தது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

'படாஸ்கர் தீர்ப்பு தவறான அடிப்படையில் எழுந்தது'

'எல்லைப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண பெரும்பான்மை மக்களின் மொழியே அடிப்படையாக வேண்டும்'

மக்கள் சபைத் தலைவர் அனந்தசயனம் கருத்து

திருத்தணி, அக். 3—

"படாஸ்கர் தீர்ப்பு தவறுகள் மலிந்த அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதால், தீர்ப்புக் குறித்து நான் சந்தோஷப்படுவதற்கு இல்லை" என்று மக்கள் சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் இங்கு கருத்தறிவித்திருக்கிறார்.

1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு தவறுடையது என்றும், 1961-ம் ஆண்டும் எடுக்கப்படக் கூடிய மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் எல்லைத் தகராறுகள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களில் 60 சதவிகிதத்தினர் எந்த மொழி பேசுகின்றனரோ, அந்த மொழி வழங்கும் மாநிலத்துடன் அந்தப் பிரதேசம் சேர்க்கப்பட வேண்டும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"ஆனால் படாஸ்கர், சம்பந்தப்பட்ட சர்க்கார்கள் தந்த புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டே தீர்ப்பு வழங்கியிருக்கிறார்; எனவே, ஏதாவது சிறுமாற்றங்கள் தேவைப்பட்டால், அதனை மக்கள் சபையில் செய்து கொள்ளலாம்"

என்றும், அய்யங்கார் கருத்தறிவித்திருக்கிறாராம்!

'தனிநாடு' இலட்சியம் கொண்ட நாகர்கள்

மீண்டும் திடீர்த் தாக்குதல்கள்

ஷில்லாங், அக். 4—

டில்லி ஆட்சிக்கு உட்பட்ட ஒரு தனி மாநிலம் அமைத்து நாகர் கிளர்ச்சிக்கு ஒரு முடிவு காண எண்ணியுள்ள இந்தியப் பேராசுக்கு, வேறுபட்ட நிலை உருவாகியுள்ளது.

அசாம் திட்ட அமைச்சர் மலைப் பகுதிகளில் சுற்றிவரும்போது, தனிநாடு இலட்சியத்தில் ஈடுபட்டுள்ள நாகர்கள் அவரைத் திடீரெனத் தாக்கினாராம்; அவர் சென்றிருந்த 'ஜீப்' காரை நோக்கிச் சுட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனராம். பாதுகாப்புக்குச் சென்றிருந்த ஆயுதம் தாங்கிய போலீஸ் ஏமாற்றமடைந்ததாம். இதில் எத்தனைப்பேர் காயமுற்றனர் என்று கூறப்படவில்லை.

துனீஸ்-பாரிஸ் நெருக்கடி

தூதுவர் அழைக்கப்படுகிறார்

துனீஸ், அக். 4—

முன்னர் பிரான்சின் காலனியாக துனீசியா இருந்தது. இப்போது பிரெஞ்சு ஆட்சிக்கும் துனீசியாவுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாகப் பிரான்சிலுள்ள துனீசியாவின் தூதுவர் திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

அல்சீரியாவிலிருந்து பிரெஞ்சு விமானப்படை துனீஸ் கிராமங்களைத் தாக்குவதாக புகார் கூறப்படுகிறது.

நந்தாவின் திருவுளம்!

புதுடில்லி, அக். 4—

இப்போது தொழிலாளர் இலாகாவையும் கவனித்துவரும் திட்ட இலாகா மந்திரி குல்ஜாரிலால் நந்தா, தொழிலாளர் இலாகாவை வேறு யாரிடமாவது தந்துவிட விரும்புகிறாராம்! அவருக்கு திட்ட இலாகா வேலைகளே தலைக்குமேல் இருக்கின்றனவாம்!

இதன் பேரில் முன்பு தொழிலாளர் இலாகா மந்திரியாயிருந்த கந்துபாய் தேசாயின் பெயர் மந்திரி பதவிக்கு அடிபடுகிறதாம்! தேசாய், தேர்தலில் தோற்றவர்; அவரை ராஜ்ய சபையில் அமர்த்தி மந்திரியாக்கத் திட்டமாம்!

அமெரிக்க 'அட்லாஸ்' பறக்கும் குண்டுகளின் மதிப்பு 40 இலட்சம் டாலர் (ரூ. 190 இலட்சம்)களாம்!

அமெரிக்கா வசம் உள்ள விசை ஆயுதங்கள் 4,400 டாலர் முதல் 80 இலட்சம் டாலர்வரை மதிப்புள்ளனவாம்!

கேரளத்தில் 2·25 கோடி செலவில் அணைக்கட்டு

கவர்னர் திறந்துவைத்தார்

திருச்சூர், அக். 4—

இங்கிருந்து 15 மைல் தொலைவில் பீச்சி எனும் இடத்தில் ரூ. 2·25 கோடி செலவில் கட்டப்பட்டிருக்கும் பீச்சி அணைக்கட்டினை, கேரள மாநில கவர்னர் பி. இராமகிருஷ்ணராவ் இன்று துவைக்கி வைத்திருக்கிறார்.

சேலம் நகரில் நில நடுக்கம்!

சேலம், அக். 5—

சேலம் நகரில் நேற்று பகல் 12-45 மணியளவில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. படுத்துக்கொண்டிருந்தவர்கள் உருண்டு விழுந்தனர் என்றும், கதவுகள் சன்னல்கள் ஆட்டம் கொடுத்தன என்றும், உறுமல் சத்தம் கேட்கப்பட்டது என்றும், ஏற்பட்ட நட்டத்தின் மதிப்பு இன்னும் கணக்கிடப்படவில்லை என்றும் செய்திகள் கூறுகின்றன.

தமிழருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

முயற்சி கைவிடப்பட்டது

கொழும்பு, அக். 5—

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் மேற்கொண்ட 'தமிழ் எதிர்ப்புப் பாத யாத்திரை' கைவிடப்பட்டுவிட்டது. போலீஸ் பாதுகாப்புடன் 12-வது மைலில் அப்படையினர் வீடு திரும்பினராம்!

'தமிழுக்கு மதிப்பு தருவது கூடாது' என்பதுதான் இவர்களது பிடிவாதக் கோரிக்கையாகும்; இதற்குப் போலீஸ் உதவி வேண்டும் என்று கேட்டதற்கு, 'இயலாது' என்று பதில் கிடைத்த காரணத்தினால், இந்த 'பாத யாத்திரைப் படை' திரும்பிவிட்டுள்ளது.

என். சிவராஜ்: இந்தியக் குடியரசுக் கட்சித் தலைவரானார்

டாக்டர் அம்பேத்கார் நிறுவிய 'தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்' கலைக்கப்பட்டு, 'இந்தியக் குடியரசுக் கட்சி' என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கட்சிக்கு திரு. என். சிவராஜ் (எம். பி., சென்னை) தலைவராகவும் திரு. சோப்ரகாடே செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கருநாடகத் தலைநகரில் ஈ.வெ.கி.சம்பத்

பெங்களூர் இரயில் நிலையத்தில் மகத்தான வரவேற்பு

கன்னட மக்களிடையே கழக இலட்சிய முழக்கம்

கழக மேடையில் கன்னடப் பத்திரிகாசிரியர் பேச்சு

பெங்களூர், அக். 5—

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மக்கள்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதன் முறையாகப் பெங்களூர் வந்ததையொட்டி கழகத் தோழர்களின் ஆர்வம் கரைபுரண்டோடியது.

3—10—57 காலையில், ஆயிரக்கணக்கான மக்கள் இரயில் நிலையத்தில் திரண்டிருந்தனர்; கழகத் தோழர்கள் மூன்று பிரிவாக மூன்று இரயில் நிலையங்களில் கூடியிருந்தனர்.

பெங்களூர் கிழக்கு இரயில் நிலையத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தோழர்கள், தோழர் உசேன் தலைமையில் தோழர் சம்பத் அவர்களுக்கு மாலையணிவித்து இரயிலிலேயே சம்பத் அவர்களுடன் வந்தனர்.

பெங்களூர் கன்டோன்மெண்ட் இரயில் நிலையத்தில், மாவட்டச் செயலாளர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில், தோழர்கள் அரங்கண்ணல், கி. சோழன், தி. திராவிடமணி, நகரப் பிரமுகர் ஜி. இராசகோபால், மற்றும் நூற்றுக்கணக்கான தோழர்கள் சம்பத் அவர்களை வரவேற்றனர்; பல தோழர்கள் மலர் மாலைகள் அணிவித்தனர்.

மீண்டும் இரயில் புறப்பட்டது; கழகத் தோழர்களின் வாழ்த்தொலி வானைப் பிளந்தது!

இறுதியாக பெங்களூர் சிட்டி இரயில் நிலையத்தை அடைந்ததும் அங்கே கட்டுக்கடங்காத கூட்டம் தோழர் சம்பத் அவர்களை வரவேற்கக் காத்துக்கொண்டிருந்தது.

இரயில் நின்றதும், அக்கிப்பேட்டை கழகச் செயலாளர் தோழர் வி. கே. நடேசன், தோழர் சம்பத் அவர்களுக்கு மாலையணிவித்தார்; தொடர்ந்து எல்லாக் கிளைக் கழகங்களின் சார்பிலும் மாலைகள் அணிவிக்கப்பட்டன; ஆயிரக்கணக்கான தோழர்களின் ஆரவாரமும் வாழ்த்தொலியும் இரயில் நிலையத்தை அதிரச் செய்தன.

11 மணியளவில், ஆரிய சத்திரிய சத்திரத்தில் கழக ஊழியர்கள் கூட்டம் தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது; எல்லாக் கிளைக் கழகச் செயலாளர்களும் பேசினர்.

இறுதியாகத் தோழர் சம்பத் அவர்கள் கருநாடகத்தில் கழகம் ஆற்ற வேண்டிய செயல்முறைகளைப் பற்றி அரிய கருத்துரை வழங்கினார். 1-30 மணிக்கு கூட்டம் முடிவடைந்தது.

மாலை 5-30 மணிக்கு சுபாஷ் நகர் திடலில் அக்கிப்பேட்டை தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; கூட்டத்திற்கு திரு. ஜே. கனகசுந்தரம் தலைமை தாங்கினார்.

கன்னடத் தோழரும் 'விஸ்வ கர்நாடகா' தினசரியின் ஆசிரியருமான தோழர் குமாரவெங்கண்ணா அவர்கள் கன்னடத்தில் பேசினார்; இந்தியை மத்திய சர்க்கார் தென்னாட்டில் கட்டாயப் பாடமாக்குவதை அவர் வன்மையாகக் கண்டித்தார்; மத்திய சர்க்கார் தென்னாட்டைப் புறக்கணிக்கும் விதங்களைப் பற்றியும் அவர் அழகாக கன்னட மொழியில் எடுத்துரைத்தார்.

அடுத்து தோழர் எஸ். வி. பதி அவர்கள் ஆங்கிலத்தில் கழகக் கொள்கைகளை விளக்கினார்.

இறுதியாகத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேச எழுந்தார்; ஐம்பதுக்கும் மேற்பட்ட கிளைகள், மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் சார்பிலும், தனிப்பட்டோராலும் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன; வரவேற்பு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

பின்னர் சம்பத் அவர்கள் சுமார் 1½ மணி நேரம் அரசியல் நிலை குறித்து அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

காங்கிரஸ் கட்சியும், மற்ற அகில இந்தியக் கட்சிகளும், மக்கள் சபையில் பிராந்திய கட்சிகளை நடத்திவருகின்ற முறைகளைப் பற்றியும், பிராந்தியக் கட்சிகளிடையே ஏற்பட்டுக்கொண்டு வருகின்ற விழிப்புப் பற்றியும், விரிவாகப் பேசினார்.

8-15 மணியளவில் தோழர் வே. இளஞ்சேரன் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

(ந-கி.)

தமிழின் இடத்தைத் தட்டிப் பறிக்க—

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—10—57 சனி

நிறவெறித் தாண்டவம்

ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு இராஜ்யங்கள் சிலவற்றில், நீக்ரோவருக்கு எதிரான வெள்ளையரின் நிறவெறித் தாண்டவம், அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருந்த நிலை மாறி, நித்திய நிகழ்ச்சிகளாகியுள்ளன.

இன ஒதுக்கல் கூடாது என்ற குடியரசின் சட்டம், சில ராஜ்யங்களின் கவர்னர்களாலேயே துச்சமென மதிக்கப்படுகிற துர்ப்பாக்கியமான நிலை கூடத் தலைதூக்கியது. குடியரசுத் தலைவர், சட்டத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற, பெடரல் குடியரசின் துருப்புகளை அனுப்பவேண்டி வந்தது.

நீக்ரோ மாணவர்களை, தங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து உட்கார்ந்து கல்விபெற அனுமதிக்கக்கூடாது என்று வெள்ளையரான பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்; நீக்ரோவரைத் துன்புறுத்தினர்; கொடுமைப்படுத்தினர்; அவமானத்திற்கு ஆளாக்கினர்; ஆனால், இந்த நஞ்சு, பிஞ்சு உள்ளம் படைத்த மாணவர்களுக்கும் ஊட்டப்பட்டு, உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் வெள்ளைச் சிறுர்களே, நீக்ரோவச் சிறுர்களை நேரடியாகக் கொடுமைப்படுத்தும் கவலைப்படத்தக்க நிலையும் வளர்ந்துவிட்டிருக்கிறது.

பெடரல் சர்க்காரின் சார்பில் குடியரசுத் தலைவர் ஐசனோவர், நிறவெறியால், நீக்ரோவ மக்களுக்குத் துன்பம் இழைக்கும் வெள்ளையர்களை சட்டத்திற்குத் தலைவணங்குமாறு செய்ய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார் என்பதில், நீக்ரோவர்கள் மன ஆறுதல் பெறக்கூடும். ஆனால், இந்த நடவடிக்கைகள், காலவரையறையின்றி நீடித்துக் கொண்டிருக்க முடியாது என்பதால், அவர்கள் கவலைப்படுவர் என்பதில் சந்தேகம் இல்லை.

சில ராஜ்யங்களின் கவர்னர்களேகூட பெடரல் குடியரசின் சட்டத்தையும், தலைமை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பிடிவாதமாக உதாசீனம் செய்வதாகச் சில செய்திகள் கூறுகின்றன; இவை உண்மையானால் பிரச்சினை இன்னும் ஆழமானது என்றே யூகிக்க வேண்டியிருக்கிறது.

அமெரிக்காவில் இன இணைப்புக்காக, சட்டபூர்வமான நடவடிக்கைகள், இரு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து லிங்கன் வகுத்துத்தந்த வழியில் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

பல அமெரிக்கப் பெரியவர்கள் நீக்ரோவரின் சமத்துவத்திற்காக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்; தேவாலயப் பாதிரிமார்கள் ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே எனக் கற்றுத் தரவும் தவறியதில்லை.

இனவேறுபாடு காட்டுவது, சட்டம் அனுமதிக்காத ஒன்று என்றநிலை உறுதிசெய்யப்பட்டிருக்கிறது; இதன்படி, நீக்ரோ மாணவர்கள் இதர அமெரிக்க மாணவர்களுடன் சேர்ந்து கல்வி பெறுவதை, எவரும் தடுக்க முடியாது என்று உச்சமான நீதிஸ்தலம் தெளிவான தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

என்றாலும், நீக்ரோவர்களை ஒதுக்கி, தங்களின் நிறப் பெருமையை நிலைநாட்டிக் கொள்ளத் துடிக்கும் வெறியர்களைக் காணுகிறோம்; அவர்களது சட்ட மீறுகைகள், ஆர்ப்பாட்டங்கள், கொடுமைகள் நாளும் வளர்ந்தவண்ணமிருக்கின்றன. நீக்ரோவர் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் நித்திய நிகழ்ச்சிகளாகின்றன.

இந்தநிலை, பொதுவாக உலகிற்குத் தெரிவிப்பது எல்லாம், சட்டங்களால் மட்டும் மக்களின் உள்ளத்தை விரிவாக்கிவிட முடியாது என்பதைத் தான்.

பல தலைமுறைகளுக்குப் பின்னும் அமெரிக்கரில்—நாகரீக முதிர்ச்சியில் திளைத்திருப்பவர்களில் முதன்மையானவர்கள் எனக் கூறப்படும் அமெரிக்கரில்—கணிசமான தொகையினருக்கு, நீக்ரோவரும் 'நம்மைப்போல மனிதர்கள்தான்' என்று எண்ணும் உள்ள விரிவு, மனப்பக்குவம், பெருந்தன்மை, மனிதாபிமான உணர்வு, தலையாய மனிதப்பண்பாடு இன்னும் ஏற்படவில்லை என்பதையும் சமீபகாலத்திய சம்பவங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

உலக அரங்கின் பல துறைகளிலும், நய ஒழுக்க ரீதியான துணிவுக் குறைவால் அவதிப்படும் அமெரிக்காவிற்கு, இந்தச் சம்பவங்கள் மேலும் தீங்கு பயப்பன என்பதில் சந்தேகம் இல்லை.

மனித உயிர்களின் சமத்துவம் பற்றிய இந்தப் பிரச்சினை, உலகெங்கிலும் பொதுவாகவும் தென்னாட்டில் குறிப்பாகவும், சமூக சமத்துவத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் பலருக்கும் வளமான அனுபவங்களையும், அரிய பாடங்களையும் கற்றுத் தருவனவாகும்.

வடவர் கொள்ளை!

பம்பாய், அக். 3—

மக்களுக்குத் தேவைப்படும் அவசியமான பொருள்களை வெளிநாடுகளிலிருந்து பம்பாய் வியாபாரிகள் தான் அதிகமாக இறக்குமதி செய்கின்றனர். திடீரென இந்தியப் பேரரசு விதித்த இறக்குமதித் தடையின் காரணமாகப் பம்பாய் வியாபாரிகள், தங்கள் கைவசமுள்ள சரக்குகளைப் பதுக்கியும், 15 முதல் 20 சதவிகிதம் வரையில் விலையை உயர்த்தியும், பொது மக்களுக்கும், மற்ற சிறு வியாபாரிகளுக்கும் பாதக நிலையை உருவாக்கியுள்ளனர் என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழ் குறிப்பிட்டிருக்கிறது.

ஐதராபாத்திற்கு தனி அரிசி மண்டலம்?

ஐதராபாத், அக். 4—

ஆந்திர மாநிலம் பொதுவாக தேவைக்கு அதிகமான அரிசி உள்ள மாநிலமாக இருப்பினும், அதன் தலைநகரமான ஐதராபாத், பற்றுக்குறைப் பகுதியாக உள்ளதாம். எனவே, ஐதராபாத் நகரத்திற்கு ஒரு தனி அரிசி மண்டலம் ஏற்படுத்த வேண்டும் என்று ஆந்திர முதலமைச்சர் மத்திய உணவு அமைச்சரிடம் வற்புறுத்தியுள்ளார்.

பரம்பிக்குளம் தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்காது?

திருச்சூர், அக். 4—

'பரம்பிக்குளம் தண்ணீர் வீணாக அரபிக் கடலில் போய்ச் சேருகிறது; இதைத் தமிழகத்திற்குக் கிடைக்கச் செய்யவேண்டும்' என்று கூறப்படுவதை மறுத்துள்ளார் கேரள அமைச்சர் கிருட்டின அய்யர்.

'கேரளத்தில் கிடைக்கும் ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரும் அம்மாநிலத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது' என்று அவர் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினைபற்றிய முழு விவரங்களும் விரைவில் கூடவிருக்கும் எல்லாக் கட்சிகளின் அவையில் அறிவிக்கப்படுமாம்.

மைசூரில், மருத்துவக் கல்வி நிறுவனம், 3 ஆண்டுகளுக்கு முன்னர் ரூ. 10 இலட்சம் செலவில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவியது.

இந்தக் கல்லூரியை அரசாங்கம், கொடையாக இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது.

வரலாற்றிலேயே முதல் தடவையாம்!

பெர்ன், அக். 4—

சுவிட்சர்லாந்தின் வரலாற்றிலேயே முதன் முதலாகப் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'மாலடோவ்' நகரத்தின் பெயர் மாற்றப்பட்டது

மாஸ்கோ, அக். 4—

ரஷ்ய நகரங்களுக்கு— பகுதிகளுக்கு— தொழில் நிறுவனங்களுக்கு— கப்பல் முதலியவைகளுக்கு உயிருடனிருக்கும் ரஷ்யத் தலைவர்களின் பெயரிடப்படக்கூடாது என்ற முடிவையொட்டி, 'மாலடோவ்' நகரத்தின் பெயர் 'பெர்ம்'என்று மாற்றப்பட்டுள்ளது.

தேயிலை ஏற்றுமதியிலும் இந்தியாவுக்கு ஏமாற்றம்!

சிறு நாடுகளுடன் போட்டியிட முடியவில்லை; வடநாட்டுத் தேயிலையின் தரம் குறைவு

எர்ணாகுளம், அக். 3—

இந்தியத் தேயிலைக்கு வெளிநாடுகளில்—குறிப்பாக இங்கிலாந்தில் அதிகக் கிராக்கி இருந்துவந்துள்ளது; இதன் காரணமாக் அந்நியச் செலாவணிக்கும் வசதி ஏற்பட்டிருந்தது; ஆனால் இந்த ஆண்டில், இந்த நிலை மாறிவிட்டது.

சென்ற ஆண்டில், வடஇந்தியாவிலிருந்து 18,23,20,000 பவுண்டு தேயிலை ஏற்றுமதி செய்யபட்டுள்ளது.

தென்னகத்திலிருந்து 42 இலட்சம் பவுண்டு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் முதல் ஆறுமாத காலத்தில் வட நாட்டிலிருந்து 13,56,20,000 பவுண்டு தேயிலையும், தென்னகத்திலிருந்து 33,07,000 பவுண்டு தேயிலையும் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

உலக மார்க்கெட்டில், இத்துறையில் இந்தியாவுடன் இலங்கை போட்டியிடுவதே இதற்குக் காரணமாம்!

இலங்கை, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஜுன் திங்களுக்குள் 1,90,00,000 பவுண்டு அதிகத் தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளதாம்.

இதைத் தவிர, பாகிஸ்தான், இந்தோனேஷியா போன்ற சிறு நாடுகளும் அதிகமாக இந்தியாவுடன் போட்டியிடுகின்றனவாம்!

இந்தியத் தேயிலையைவிட இந்த நாடுகள் குறைந்த விலையில் தேயிலையை விற்பனை செய்கின்றனவாம்!

மேலும், வடநாட்டில் தயாரிக்கப்படும் தேயிலையின் 'தரம்' இந்த ஆண்டில் மிகவும் குறைந்துவிட்டதாம்!

வடநாட்டு வியாபாரிகள், இலாப நோக்கத்துடன் தரத்தைக் குறைத்து, அதிக விலையை நிர்ணயித்துள்ளனர் என்றும் கருதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

'முக்கூட்டு மாநாடு கூட்டுக'

பண்டிதருக்கு பாங்கி ஊழியர் வேண்டுகோள்

புதுடில்லி, அக். 3—

மேற்கு வங்க பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடத் தயாராக இருப்பதாகவும், அவர்களுடன் உடன்பாட்டிற்கு வருவதற்கான வழிவகைகளைக் கண்டறிய மத்திய தொழிலாளர் மந்திரி நந்தாவை அனுப்புமாறும், அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கம் பண்டிதருக்குத் தெரிவித்திருக்கிறது.

பண்டிதர், வேலை நிறுத்தம் பற்றி சங்கத்திற்கு எழுதிய கடிதத்திற்கு பதில் எழுதும்போதே, சங்கத்தவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றனர்.

மேலும், தகராறுகளுக்கு முடிவு காணுவதில், 'டிரிப்யூனல்'கள் நியமிப்பதில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையெனவும், அதனை முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாகவே பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றும், எனவே, ஒரு முக்கூட்டு மாநாடு நடத்துவதே வழி என்றும் சங்கத்தவர், பண்டிதருக்கு எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

'அணு ஆயுத சோதனைகளுக்குத் தடை வேண்டும்'

பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாட்டில் தீர்மானம்

பிரைட்டன், அக். 3—

'உலகெங்கிலுமாக அணு ஆயுத சோதனைகளை நிறுத்த வேண்டும்; எல்லா அணு ஆயுதங்களையும் அழிக்க வேண்டும்' எனக் கோரி, ஒருமனதான தீர்மானம் ஒன்று பிரிட்டிஷ் தொழிற்கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதேபோது, 'எதிர்காலத்தில் அமையக்கூடிய தொழிற் கட்சி சர்க்கார், அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும், உபயோகிப்பதையும் தடுக்கும்' என்று உறுதிமொழி கூறும் தீர்மானம், கட்சித் தலைவர்களால் எதிர்க்கப்பட்டு, தோல்வியுற்றிருக்கிறது.

இதுபற்றி, எதிர்காலத்தில் தொழிற் கட்சி சர்க்கார் அமைந்தால் வெளி விவகார மந்திரியாக வரக்கூடியவர் எனக் கருதப்படும் அனூரின் பெவான், 'இந்த வகையில் உறுதிமொழி தருவது இயலாதது' எனக் கூறியபோது, மாநாட்டில் பெரும் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டதாம்!

'சமுதாயத்தைப் பற்றிய ஆராய்ச்சி கூடாது'

'சட்டத்தைத் தெளிவுபடுத்துவதே நீதிபதியின் கடமையாகும்'

"நாட்டின் சமூக, பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றவாறு சட்டங்களைக் கையாளவேண்டுமென்று நீதித்துறைக்கு இந்தியப் பிரதமர் தந்துள்ள விளக்கம் புதுமையானதாக—எந்த சனநாயக நாட்டின் வரலாற்றிலும் காண முடியாத ஒன்றாக இருக்கின்றது. நீதித்துறை என்பது நாளுக்கு நாள் மாறக்கூடியதோ, ஆட்சிக்கு வரும் கட்சிக்குத் துணையாக நிற்கக்கூடியதோ அல்ல.

"எப்பொழுதும், தனிப்பட்டோர் வழக்குகளில் சட்டத்தைப் பாரபட்சமின்றிப் பயன்படுத்தி, அரசாங்கக் கொள்கைக்குச் சாதகமோ, பாதகமோ இன்றி இயங்குவதுதான் சட்டத்துறையின்வேலையாகும்.

"இருதரப்பாரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, முடிவு செய்வதே நீதிபதியின் கடமை. சமுதாயத்தின் சார்பாகப் பரிசீலிக்கவோ ஆராயவோ, வேண்டிய அவசியமில்லை. நீதிபதியின் நோக்கமெல்லாம், உண்மையைக் கண்டறிந்து, சட்டப்படி நீதி வழங்குவதேயாகும்"

என்று, ஒரு வழக்கில் (1957) திரு. ஜே. டானிங் என்பார் குறிப்பிட்டுள்ளார்.

நூறுண்டுக்கு முன்னர் திரு. ஜே. பார்க் என்பார் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"சட்டத்தைத் தெளிவுபடுத்தி விளக்குவதே நீதிபதிகளின் கடமை; சமுதாயத்திற்கு எது நல்லது என்பதை அவர் கண்டறிய வேண்டியதில்லை."

—'டைம்ஸ் ஆப் இந்தியா' (30—9—57) இதழில் திரு. ஜேய்க்கிசன் என்பார் மேற்கண்ட கருத்தைக் கடிதமாக எழுதித் தெரிவித்துள்ளார்.

'பக்துனிஸ்தான் தனி நாடாக வேண்டும்'

மேற்குப் பாகிஸ்தான் அமைச்சர் ஆதரவு

லாகூர், அக். 4—

மேற்குப் பாகிஸ்தான் செய்தி இலாகா அமைச்சர் சையத் அபீத் உசேன், 'பக்துனிஸ்தான்' தனியாகப் பிரிக்கப்படவேண்டும்என்ற கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் என்று செய்தி வெளியாகியுள்ளது.

திராவிட மக்களை நிரந்தர அடிமைகளாக்க—

‘வாழை’யின்வளத்தைவடவர்பறித்து‘பட்டை’யை நமக்குப் பரிசாகத் தருகின்றனர்!

‘சேட்’டுகள் ஆட்சியில் நமக்குக் கிடைத்த நன்மைகள்தான் என்ன?

‘மருமகள்’ நிலையில் காமராசரும் ‘மாமியார்’ நிலையில் நேருவும் இருக்கும் நிலை ஏன்?

அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் விவரம்

அண்ணா அவர்கள் சென்ற மாதம் 11, 14, 18, 19, 20 ஆகிய தேதிகளில் முறையே எலந்தங்குடி, மண்ணச்சநல்லூர், சுப்பிரமணியபுரம், கீரனூர், புதுக்கோட்டை, திட்டச்சேரி, சின்னதாராபுரம் முதலிய ஊர்களில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் விவரம் அடியில் தரப்பட்டுள்ளது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல், பல்லாயிரக்கணக்கான மக்கள் பல ஊர்களில் கூடியிருந்து அண்ணாவின் அறிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

எலந்தங்குடி :

11—9—57 காலை மாயவரத்தை அடுத்துள்ள எலந்தங்குடியில் நடைபெற்ற அறிவழகன்—எழிலரசி மணவிழாவில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டவர்கள் வைதீக முறையில் மணந்துகொண்டவர்களைவிட நல்ல முறையில் வாழத்தான் செய்கிறார்கள்.

“சீர்திருத்தம் மூன்று வகைப்படும்—விரும்பி ஏற்றுக்கொள்வது; பிறரைப் பார்த்துச் சீர்திருந்துவது; அரசியலாரே சட்டத்தின் மூலமாக ஏற்றுக்கொள்ளச் செய்வது.

“ஆனால் இந்த மூன்று முறையோடுங்கூட, விரும்பியோ விரும்பாமலோ சீர்திருத்தத்தை நாமே நாளடைவில் ஏற்றுக்கொள்கிறோம்.

“இன்னும் பத்தாண்டுக் காலத்தில் விளம்பரம் போட்டு புரோகிதர்களை அழைத்தாலும் புரோகிதர்கள் கிடைக்க மாட்டார்கள்; இப்போதும் படித்தவர்கள் யாரும் புரோகித வேலைக்குச் செல்வதில்லை; வேறு வழியில்லாதவர்கள்தான் அந்தத்தொழிலை இன்று செய்கிறார்கள்.

“விளக்கினால் கிடைக்கிற பலன் ஒளி. மணத்தினால் கிடைக்கும் பலன் வாழ்வு. ‘அகல் விளக்கு எரியத் தேவைப்படும் திரியும் எண்ணெயும் மின்சார விளக்கில் இல்லையே’ என்று குறைப்பட்டுக்கொள்வதில் பொருளில்லை; தேவை, ஒளி என்பதை உணர்வதுபோல, மணத்தினால் கிடைக்க வேண்டிய நல்வாழ்வு சீர்திருத்த மணத்திலும் கிடைப்பது கண்டு மகிழ வேண்டும்.”

மண்ணச்சநல்லூர் :

மண்ணச்சநல்லூர் தி.மு.கழகக் கிளையின் சார்பில் 11—9—57 இரவு 7 மணிக்கு சிவன் கோவில் திடலில் திரு. பு. ரெ. மாரிமுத்து தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ். மணி, திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளையும், இதுவரையில் நாம் பலவித எதிர்ப்புக்களுக்கிடையேயும் அடைந்துள்ள வளர்ச்சி குறித்தும் பேசினார்.

ஏராளமான மக்கள் கூடியிருந்து சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர்.

பிறகு தலைவர் சில தீர்மானங்களைக் கூட்டத்திடையே நிறைவேற்றியபின் நன்றி கூறியதும் கூட்டம் இனிது முடிவுற்றது.

சுப்பிரமணியபுரம் :

14—9—57-ல், சுப்பிரமணியபுரம் ஊர் முழுதும் வரவேற்பு வளைவுகளாலும், குலையுடன் கூடிய வாழை, கூந்தல் தோரணங்களாலும் அழகு செய்யப்பட்டிருந்தது.

மாலை 4 மணி முதல் மக்கள் கூட்டம் கடல் அலைபோல் புறப்பட்டுவந்தது. அறந்தாங்கி வட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழகங்கள் அனைத்தும் பெயர் பொறித்த கொடிகளுடன் ஊர்வலத்தில் கலந்துகொள்ள வந்திருந்தன.

அண்ணா அவர்களின் வருகை காலம் கடந்துகொண்டிருந்தும் மக்கள் அனைவரும் அண்ணாவைக் காணப்போகும் மகிழ்ச்சியில் நகரைச் சுற்றிச்சுற்றி செய்யப்பட்டிருந்த அழகுதனைச் சுவைத்துக்கொண்டு நேரத்தைக் கழித்தனர்.

மாலை 6 மணியிலிருந்து சுப்பிரமணியபுரம் இதுவரை கண்டிராத—தாங்க முடியாத மக்கள் திரள் பெருகிக்கொண்டிருந்தது; மாவட்டச் செயலாளர் என்.எஸ். இளங்கோ அவர்கள் அமைதியை நிலைநாட்டிக்கொண்டிருந்தார்.

இரவு மணி 9-30-க்கும் மேலாயிற்று; அண்ணா அவர்கள், எதிர்பாராதவகையில், சுப்பிரமணியபுரத்திற்கு வரும் சாலை தவறி கார் வருவதற்கும் வழியில்லாத நாகுடி கிராமத்திற்கு வந்துசேர்ந்தார். அங்கிருந்து, வயதுமுதிர்ந்த கிராமத் தோழர் ஒருவரின் உதவியுடன் சுமார் இரண்டு மைல்கள் கால் நடையாக சுப்பிரமணியபுரத்திற்கு வந்து சேர்ந்தார்.

அண்ணாவைக் கண்ட மக்கள் செய்த மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணதிரச் செய்தது. அண்ணா அவர்கள் தொலைவை கருதாது நடந்துவந்த பொறுப்பையும், அன்புப்பெருக்கையும் எண்ணிஎண்ணி மக்கள் வியந்தனர். கார் பல இடங்களில் செய்த கோளாறினால் உரிய காலத்தில் வந்துசேர முடியவில்லை என்று அண்ணா அவர்கள் கூறினார்கள்.

ஊராட்சி மன்ற வரவேற்பு

அண்ணா அவர்கட்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. கிராம தி. மு. கழகச் செயலாளரும் ஊராட்சிமன்றத் துணைத் தலைவருமான கே. எஸ். சாமிநாதன் அவர்கள் வரவேற்பிதழை வாசித்தளித்தார். அண்ணா அவர்கள் தம்முடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டார்.

கழகக் கட்டிடத் திறப்பு

பிறகு அண்ணா அவர்கள் தி. மு. கழகத்திற்குச் சொந்தமாக சுமார் ரூ. 1,500-க்கு மேல் செலவிட்டுக் கட்டப்பட்டுள்ள கிளைக் கழகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். அண்ணா அவர்கள் கட்டிடத்தைக் கண்டு வியந்து கிளைக் கழகத் தோழர்களின் முயற்சியைப் பாராட்டினார்.

பள்ளிக் கட்டிடத் திறப்பு

பின்பு கிராமமக்களால் 7000-த்திற்கு மேல் செலவிட்டு கட்டப்பட்டுள்ள ‘துவக்கப் பள்ளிக் கட்டிடத்தை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். இராமசாமி (தேவர்) தலைமையில் திறந்துவைத்தார். கல்வியின் அவசியத்தையும், மக்கள் அதைப் பயன்படுத்திப் பெற வேண்டிய பலன்களையும் விளக்கி, தமக்களிக்கப்பட்ட இந்த நல்வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பொதுக்கூட்டம்

இரவு 11 மணி அளவில் சுப்பிரமணியபுரம் தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் துவங்கியது; தோழர் ஆ. துரையரசன் தலைமை வகித்தார்; தலைவர், தாம், ‘திராவிடர் கழகத்திலிருந்து விலகி தி. மு. கழகத்தில் சேரவேண்டிய நிலை’ ஏற்பட்டதை விளக்கிப் பேசினார்.

அடுத்து தஞ்சை மாவட்டச் செயலாளர் என்.எஸ். இளங்கோ அவர்கள், தி. மு. கழக வளர்ச்சியையும் மக்கள் அதற்கு அளித்துவரும் மதிப்பையும் ஆதரவையும் சுட்டிக்காட்டிப் பேசினார்.

அடுத்து அண்ணா அவர்களுக்கு அறந்தாங்கி மக்களாலும், கழகங்கள், கழகச் சார்பு மன்றங்கள் ஆகியவற்றாலும் அணிவிக்கப்பட்ட மாலைகளும், கைத்தறி ஆடைகளும் கொடுக்கப்பட்ட வரவேற்பு வாழ்த்துக்களும் மலைபோல் குவிந்தன.

அண்ணா அவர்கள் கூட்டத்திலிருந்த சுமார் 15,000 மக்களின் கையொலிக்கிடையே பேசும்போது குறிப்பிட்டதாவது :—

“இவ்வளவு பெரிய கிராமத்திற்கு நல்ல சாலை இல்லாதிருப்பது கண்டு வருந்துகிறேன். நீங்கள் கொடுக்கிற வரிப் பணம் குறைவா என்றால், இல்லை; ஏன் இந்த நிலை? எல்லாம் வடவர் கையில் போய்ச் சிக்குகின்றன. நீங்கள் வாழை மரம் போன்றதொரு வரியைக் கொடுக்கிறீர்கள்; வடவர் அதிலுள்ள காய், இலை, தண்டு முதலியவற்றை எடுத்துக்கொண்டு பட்டையைத்தான் உங்களுக்குப் பரிசாகத் தருகிறார்கள். வெள்ளையர் காலத்தில் இருந்த வசதிகளைவிட இந்த ‘சேட்டு’கள் ஆட்சியில் என்ன நன்மைகளை அதிகமாய்ச் செய்துவிட்டார்கள்? நமக்கு வெள்ளையரும் சரி—வடநாட்டுக் கொள்ளையரும் சரி; அவர்கள் இருவரும் அன்னியர்கள்தான்,

“தமிழ்நாட்டு மக்கள் நல்வாழ்வு நடத்த வழிசெய்ய வேண்டுமானால்அதுஒருதமிழ்நாட்டுத் தலைவனின் தலைமையால்தான் முடியுமே தவிர, வடநாட்டுக்காரனால் முடியாது. அப்படிப்பட்ட தலைவனாக நான் என்னையோ, பெரியார் இராமசாமியையோ சொல்லவில்லை; வேறு யாராவது இருந்துவிட்டுப் போகட்டும்.

“மருமகள் பணியாரம் சுடும்பொழுது மாமியார் மாவை எடுத்துச் சென்றுவிட்டால் சட்டியில் என்ன இருக்கும்?

“மருமகள் நிலையில் காமராசர் இருக்கிறார் — வடநாட்டு மாமியார் நிலையில் நேரு இருக்கிறார்! நேரு மாவை எடுத்துச் செல்வது காமராசருக்குப் புரிகிறது; இருந்தாலும் அவர், காலித் தட்டைச் சுட்டிக்காட்டி, பணியாரம் இருப்பதாகக் கூறுகிறார். இவைகளையெல்லாம்சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுகிறேன்.”

மேலும் அண்ணா அவர்கள் திராவிடநாடு பிரிய வேண்டிய தன் அவசியத்தைப் புள்ளிவிவரங்களுடன் கூறி, வடநாடு வளர்வதையும்—தென்னாடு தேய்வதையும் கிராம மக்கள் உணரும்படி எளிய உதாரணங்களுடன்—நகைச்சுவை ததும்ப விளக்கி சுமார் ஒன்றரை மணி நேரம் பேசினார்.

கீரனூர் :

18—9—57 அன்று அண்ணாவின் வருகையை முன்னிட்டும், திராவிடநாடு விடுதலை வாரத்தை முன்னிட்டும் நகரே கோலாகலமாகவும் கண்கவரும் காட்சியாகவும் இருவண்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது; ஊரே விழாக் கோலத்தில் காட்சியளித்தது. எங்கு பார்த்தாலும் கழகக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தன; கழகக் காளையர்கள் ஆர்வத்தோடு பணி புரிந்தனர்.

காலை 11 மணிக்கு ‘தம்பி’ இல்லத்திற்கு அருகிலும், கடைவீதியிலும் தோழர் சோமசுந்தரம் கழகக் கொடிகளை ஏற்றினார்; செயலாளர் உ. சி. மணிராசன் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.

விளையாட்டுப் போட்டி

பின்னர் விடுதலை வாரத்தின் நினைவாக சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் விளையாட்டுப் போட்டி வைக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டியில் சிறியவர்களும், பெரியவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் குழந்தை அழகுப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைக்கும் தோழர் முகம்மது யூசுப் பரிசு வழங்கினார்.

பகல் 1 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட அண்ணா திடலில் விடுதலை வார விழாப் பொதுக் கூட்டம் தோழர் சோன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் வீ. சா. இளஞ்செழியன், ஆ. தமிழ்ச்செல்வன் ஆகியோர் திராவிடத்தின் வளங்களையும், தெற்கிற்கும்—வடக்கிற்கும் உள்ள வேறுபாடுகளையும், திராவிடம் பிரிய வேண்டிய நிலையையும் விளக்கிப் பேசினர். தலைவர் முடிவுரை கூறியபின் செய

(4-ம் பக்கம் பார்க்க)

சாதிப் பெயர் ஒழிப்பு

ஈரோடு நகரசபை தீர்மானம்

ஈரோடு, செப். 30—

சாதிப் பெயர்களைக் குறிக்கும் எதுவும் நகரசபை எல்லைக்குள் எந்தப் பொது இடத்திலும், இருக்கவிடக்கூடாது என்றும், அப்படி சாதிப் பெயரைக் குறிப்பிடும் நிறுவனங்களுக்கு அனுமதி (லைசென்சு) வழங்க மறுத்துவிட வேண்டுமென்றும், இதற்கான திருத்தங்களைப் பொதுச் சுகாதாரச் சட்டத்தில் செய்து கொள்ளலாமென்றும் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை, ஈரோடு நகரசபையில் உறுப்பினர் திரு. எம். குப்புசாமி கொண்டு வந்தார்; இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மற்றும், இந்தத் தீர்மானத்தின் நகல்களை, மாநிலத்திலுள்ள ஏனைய நகரசபைகளுக்கும் அனுப்பிவைக்கவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது.

தாளமுத்து கொலை வழக்கு

மேல் விசாரணை முடிந்தது

திருவைகுண்டம், அக். 30—

தூத்துக்குடி தி. மு. க. தோழரும், தொழிலாளர் தலைவருமான தோழர் கே. தாளமுத்துவை, கடந்த 22—5—57 காலை 10-15 மணி அளவில் பயங்கர ஆயுதங்களால் தாக்கி படுகொலை செய்ததாகவும், அவருடன் கூடச்சென்ற தோழர் ராஜாவைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த நீதிராசன், செந்தூர், இராமனுதன், செந்தூர்பாண்டியன், செல்லையா, அருணாசலம், நடராசன், சோசையா, சேவியர், அதிரசம் ஆகிய 10 பேர்மீது தூத்துக்குடி போலீசார் தொடர்ந்த வழக்கின் மேல் நீதிமன்ற விசாரணை முடிவடைந்தது.

நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. இ. ஆதிகேசவன் முன்பு நடைபெற்ற இம்மேல் விசாரணையில், தோழர் எப். எ. ஜோசப் உட்பட மொத்தம் 28 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்கு மூலமும், வழக்கறிஞர்கள் விவாதமும் முடிவடைந்தன.

இது சம்பந்தமான தீர்ப்பு, இன்னும் ஒரு வாரத்திற்குள் (அக். 10-க்குள்) சொல்லப்படும் என்று கூறப்படுகிறது. (ந. கி.)

ஆமதாபாத் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள்

“நம் தாயகத்திலே தமிழ்ப் பெரும் புலவர்களில் ஒருவரும், ஏழ்மை நிலையில் வாழ்பவரும் தி.மு. கழகத்தில் உழைப்பவருமான பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் 50-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு, ஆமதாபாத்திலுள்ள கழக உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும் தங்களால் இயன்றவரை பொருளுதவி தந்துதவுமாறு வேண்டுகிறேன்”

என, ஆமதாபாத் மணிநகர் வட்டார தி. மு. கழகக் கிளையின் செயலாளர் தோழர் வி. நரசராசன் கேட்டுக்கொள்கிறார்.

‘நம் நாடு’ இதழ்

விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் ‘நம்நாடு’ இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணபித்துக் கொள்க :—

பூதலூர்
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி : ‘நம் நாடு’

வடவர் தீட்டிய சதியே இந்தித் திணிப்பு;

இந்தியாவில் பெரும் முதலாளிகளின் இலாபம்

மேற்கு ஜெர்மனியைப்போல் மூன்று மடங்கானதாம்!

அமெரிக்கருக்கு ஆசை காட்டி டி. டி. கே. வெளியிடும் உண்மை

இந்தியாவின் இரண்டாம் திட்டத்திற்காக நிதிஉதவி தேடி அமெரிக்கா சென்றுள்ள நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அமெரிக்காவிலிருந்து ஒரு கணிசமான அளவு உதவி பெறுவதற்காகத் தொடர்ந்து வெளியிட்டுவரும் பல்வேறு கருத்துக்களில் சில, திடுக்கிடக்கூடியனவாக இருக்கின்றன.

அமெரிக்க முதலாளிகளுக்கு ஆசை காட்டுவதற்காக அவர், ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறார்; 'இந்தியாவில் சில முதலாளிகள், எல்லா வரி விதிப்புகளுக்குப் பிறகும் பெரும் இலாபம் சம்பாதிக்க முடிகிறது; அப்படிச் சம்பாதிக்கும் இலாபம், மேற்கு ஜெர்மனியில் ஒருவர் சம்பாதிக்கும் இலாபத்தைவிட இரண்டு மூன்று மடங்கு அதிகமாகும்' என்று அவர், நியூயார்க் நகரில் கூறியிருக்கிறார்.

அமெரிக்க தூரக்கிழக்கு வர்த்தகத் தொழிற் குழு மாநாடு ஒன்றில் பேசிய அவர், மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"அமெரிக்க முதலாளிகள், தங்கள் இலாபத்தையும், முதலீட்டையும் டாலர்களாக மாற்றிக்கொள்ள, எங்கள் சர்க்கார் முழுச் சுதந்திரம் அளிக்கும் என்று அமெரிக்க சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஒப்பந்தம் நீடிக்கப் பார்த்துக் கொள்வோம். இலாப நோக்கத்துடன்தான் தொழில், வர்த்தக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நாங்கள் அறிவோம்; முதலீடு செய்கிறவர்கள் எவ்வளவு இலாபம் கிடைக்குமெனத் தெரிகிறதோ அதைப் பொறுத்துத்தான் முதலீடு செய்வார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் சொல்லுவதெல்லாம், இந்தியாவில் பெரும் மூலதனக்காரர்கள் சம்பாதிக்கக் கூடிய இலாபம், மேற்கு ஜெர்மனியில் கிடைக்கிற இலாபத்தைப்போல இரண்டு மூன்று பங்காகும் என்பதுதான்.

"டெல்லி சர்க்கார் அன்னிய முதலீட்டினை விரும்பி வரவேற்கிறது; அதனால், முதலீடு செய்பவர்களுக்கும் எங்களுக்கும் இலாபம் கிடைக்கும் என்பதால், அவர்களின் இன்றைய அவசரத் தேவை எல்லாம், முதலீடு—தொழில் நுட்பப் பயிற்சி இவைதான்"

இந்தியாவிற்குக் கடன் உதவி

யூகோ வழங்கத் தயார்

புதுடில்லி, அக். 4—

இயந்திர சாதனங்களுக்காக—குறிப்பாக நீர், மின்சாரத் திட்டங்களுக்குத் தேவைப்படும் இயந்திர சாதனங்களுக்காக, நான்கு முதல் ஏழு ஆண்டுத் தவணையில், இந்தியாவிற்குக் கடன் வழங்க யூகோஸ்லேவியா தயாராக இருப்பதாக டாக்டர் விளாடிமிர் வெலிபட் என்ற யூகோ வெளிவிவகார இலாகா உதவிச் செயலாளர் இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் கருத்தறிவித்திருக்கிறார்.

அமைச்சர்கள் கார்களில் இனி கொடி பறக்காது!

சென்னை, அக். 5—

சென்னை அமைச்சர்களின் கார்களில் இனி கொடிகளைப் பறக்கவிடக்கூடாது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது; ஆனால், அவர்கள் இருப்பிடத்தில் கொடி பறந்துகொண்டிருக்குமாம்.

நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா

அண்ணா கலந்து கொள்கிறார்

7—10—57 மாலை 5-30 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் இக்பால் மன்றத்தின் சார்பில் மேற்படிவிழாபொதுக்கூட்டம் நடைபெறும். முன்னாள் நீதிபதி திரு. பி. சர்புத்தீன் தலைமைவகிப்பார். அண்ணா மற்றும் திரு. டி. செங்கல்வராயன், திரு. ஏ. கே. ஏ. அப்துல்சமது ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். ஏ.எம். முகம்மது யாகூப் இன்னிசை வழங்குவார்.

கடலுக்குள் எரிமலை!

அஜோரஸ், அக். 4—

வட அட்லாண்டிக் கடலில் பயாஸ் தீவின் 200 கெஜ தூரத்தில் கடலுக்குக்கீழ் ஒரு எரிமலை வெடித்துள்ளதாம்! எரிமலையின் வாய் 200 கெஜமாம்! 90 அடி உயரத்திற்கு நெருப்புக் குழம்பு வெளிப்படுகிறதாம்! கிராம மக்கள் வேறு இடத்திற்கு ஓடிவிட்டனராம்!

அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லாளர் நன்றிகூறக் கூட்டம் 2-30 மணிக்கு இனிது முடிந்தது.

3-மணி அளவில காற்றும் மழையும் ஆரம்பித்துவிட்டது. கிராமர் வட்டாரமே வியப்படையும் அளவுக்கு அலங்கரிக்கப்பட்ட தோரணங்களையும், வரவேற்பு அட்டைகளையும் அண்ணா காண முடியாதவாறு மழை செய்துவிட்டது. அலங்கரிக்கப்பட்ட மேடையை, காற்றும் மழையும் அசைத்தும், கழகக் காளையர்கள் மழையோடு மழையாய் நின்று அசையாதவாறு நின்று பாதுகாத்தனர். தூற்றல் இருந்தும் கிராம மக்கள், கூட ஆரம்பித்துவிட்டார்கள். 5-30 மணிக்கெல்லாம் திடலில் மக்கள் வெள்ளமாகக் காட்சியளித்தார்கள். தூற்றல் தூறியும் மக்கள் அமைதியாக இருந்தனர்.

மழையோடு, தாரைதம்பட்டை முழங்க, அண்ணா அவர்களை தோழர்கள் வரவேற்புமேடைக்கு அழைத்து வந்தனர்.

அண்ணா மேடைக்கு வந்ததும் பொதுமக்கள் ஆர்வத்தோடு முழக்கமிட்டார்கள்.

அண்ணா அவர்களுக்கு கிளைக் கழகங்கள் சார்பாகவும், உழவர் சங்கங்கள் சார்பாகவும் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுக்கூட்டம் தோழர் இ. ச. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தர்மலிங்கம் அவர்கள் சிறிதுநேரம் பேசியபின் அண்ணா அவர்கள பேச எழுந்ததும் மக்கள் கையொலி எழுப்பி வரவேற்றனர்.

அண்ணா அவர்கள் மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசென்று மீண்ட கழகத் தோழர்களான சோமசுந்தரம், காந்தி முகம்மதலி, உ. சி. சண்முகசுந்தரம் ஆகியோர்களுக்கு கிராமர் தி. மு. க. சார்பாகக் கைத்தறி ஆடை அணிவித்து, பாராட்டு இதழும் அளித்துவிட்டுப் பேசினார்.

அண்ணா அவர்கள் பேசுகையில், திராவிடத்தின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், இன்றைய அரசியல் நிலையையும், வடக்கின் வஞ்சனையையும் தெள்ளத் தெளிய விளக்கினார்.

மழை அதிகரிக்கவே, கூட்டம், சில தீர்மானங்களை நிறைவேற்றிய தோடு, செயலாளர் உ. சி. மணிராசன் நன்றி கூற இனிது முடிந்தது.

புதுக்கோட்டை:

18—9—57 இரவு 8 மணிக்கு, புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெறுவதாக இருந்த பொதுக்கூட்டம் பெருமழை காரணமாக அன்று நடைபெறாமல் மறுநாள் (19—9—57) காலை 8-30 மணிக்கு நடைபெற்றது. தோழர் சின்னராசா தங்கவடிவேல் தலைமை வகித்தார். ஏராளமான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தோழர்கள் திருச்சி எம். எஸ். மணி, அன்பில் தருமலிங்கம் ஆகியோர் பேசியபின் அண்ணா அவர்கள் இன்றைய அரசியல் நிலை குறித்து அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

திட்டச்சேரி:

19-9-57 மாலை 6-30 மணிக்கு, திட்டச்சேரி பந்தாட்டத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். பெருமழை பெய்தபோதிலும் ஏராளமான மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திட்டச்சேரி தி. மு. க. செயலாளர் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. தலைவர் உரைக்குப் பின் தோழர் மா கி. நடராசன் சிறிதுநேரம் பேசினார். பிறகு அண்ணா அவர்கள், அரிய கருத்து விருந்தளித்தார்கள். நன்றிகூற கூட்டம் முடிந்தது.

திட்டச்சேரிக்குச் செல்லும் வழியில் அண்ணா அவர்களுக்கு வெளவாலடியில் கழகத் தோழர்களால் வரவேற்பளிக்கப்பட்டது.

சின்னதாராபுரம்:

20—9—57 மாலை சின்னதாராபுரத்தில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

அன்று, அண்ணா அவர்களுக்கும் தோழர் சம்பத் அவர்களுக்கும் தொக்குப்பட்டி ஊராட்சிமன்றத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது.

பன்மொழிப் புலவர் மணி விழா நிதியளிப்புச் சிறப்புக்கூட்டம்

13—10—57 *அன்று, சென்னை கோகலே மண்டபத்தில் நடக்கவிருக்கும் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் மணிவிழா நிதியளிப்புக் கூட்டத்தில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், சி. பி. சிற்றரசு, கண்ணதாசன், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ள விருக்கின்றனர். இதற்கான டிக்கெட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும் :—*

1. *ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் படிப்பகம், சூளை—சென்னை.*
2. *வ. உ. சி. மன்றம், பெரியமேட்டு—சென்னை.*
3. *முத்தமிழ் மன்றம், 86, பி. சாலைவிநாயகர் கோவில் தெரு, சென்னை.*

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.

6 : *பிற்பகல்—வில்லிவலம்*
மாலை—செங்கற்பட்டு
7 : *சென்னை*
12 : *காவேரிப்பட்டினம்*
(நாடகத் தலைமை)
13 : *கோவை*
14 : *ஆனைமலை (வே. புதூர்)*
15 : *சோமிசெட்டிப்பாளையம்*
16 : *சென்னிமலை*
22 : *நீர்வளூர் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா*
26 : *மயிலை நபிகள் நாயகம் விழா*

கலைவாணர் என். எஸ். கே. அனுதாபக் கூட்டம்

6—10—57 *மாலை 6 மணிக்கு சென்னை — மீர்சாகிப்பேட்டை (43-வது வட்டம்) இராமராவ் தோட்டம்—சே. வி. கே. திடலில், வெண்மதி நாடக மன்றச் சார்பில் தோழர் க. பார்த்தசாரதி தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். தென்னரசு, ஈ. கே. புகழேந்தி, எம் ஈ. பழனியப்பன் ஆகியோர் பேசுவர்.*

மாணவர் சங்க விழாவில் இரா. செழியன்

7—10—57 *திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு செங்கற்பட்டு செயிண்ட் கொலம்பஸ் உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவில் தோழர் இரா. செழியன் எம்.ஏ. அவர்கள் 'ஜனநாயகத்தின் அடிப்படைகள்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.*

சென்னை 34-வது வட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர்களுக்கு :

6—10—57 *காலை 8 மணிக்கு, கழகப் பணிமனையில் மேற்படி வட்ட தி. மு. கழகச் செயற்குழுவின் அவசரக் கூட்டம் நடைபெறும். "இந்தி எதிர்ப்பு நாள்" பற்றி முடிவெடுக்கப்படும்.*

இளமுருகு - பொற்செல்வி

சுற்றுப்பயணம்

அக். 6: காரைக்குடி; 10: கன்னிவாடி; 11: பட்டுத்துறை; 13: திருப்பூர்; 14: கொடுமுடி; 16: பாலப்பட்டி; 20: திருச்செங்கோடு.

கரூர் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

6—10—57 *மாலை 4 மணிக்கு, கரூர் நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். வைரப்பெருமாள் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.*

சாமி அருணகிரிநாதர் மணிவிழா

(இரண்டாம் நாள் நிகழ்ச்சி)

6—10—57 *மாலை* 3-30 *மணிக்கு, திருவொற்றியூர்—நெடுஞ்சாலை,* 200-*எண்ணுள்ள சாது நாராயணசாமி தேசிகர் நிலையத்தில் திரு. என். சங்கரன் (சென்னை-நகராட்சிமன்றத்துணை ஆணையாளர்) தலைமையில் விழா நடைபெறும்; அவ்வமயம் திருமதி எஸ். ஜி. வள்ளியம்மையார்; எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியோரால் அளிக்கப்பட்ட செம்பொற் சால்வைகள் அணிவிக்கப்படும்; தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களால் மணிவிழா மலர் வெளியிடப்படும்; பாராட்டுரை வழங்குவோர் :—* கா. அப்பாதுரை, மயிலை-சிவமுத்து, அன்பு-கணபதி, கூ. வே. இராமகோட்டி, வா. பா. தாமரைக்கண்ணி அம்மையார்; *நூல் வெளியீடு:* கு. மு. அண்ணல்தங்கோ.

கழகக் கூட்டங்கள்

திருவையாறு :

கீழ வீதியில்
7—10—57 *மாலை* 6 *மணிக்கு*
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
பொ. தருமன்

வரகூர் :

பழனியப்பன் திடலில்
7—10—57 இரவு 8-மணிக்கு
தலைவர் : தே. பட்சிராசன்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
டி. கே. சீனிவாசன்
பொ. தருமன்
பொ. முத்தண்ணன்

குன்றத்தூர் :

7—10—57 *மாலை* 6 *மணிக்கு*
தலைவர் : தி. ந. சம்பந்தம்
பேசுவோர் :
ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.
என். எஸ். இளங்கோ
போளூர் சுப்பிரமணியம்

கோட்டப்பட்டி :

8—10—57 *மாலை* 5 *மணிக்கு*
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : எச். எஸ். இராசு
பேசுவோர் :
கி. மனோகரன்
ந. தனபாலன்

மாதர்வேளூர் :

பட்டிவாசல் எதிரில்
8—10—57 *மாலை* 6 *மணிக்கு*
தலைவர் : ஆ. சிகாமணி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
இரத்தின. பாலகுருசாமி
சுப்பையா
கோபாலன்

சொற்பயிற்சிக் கூட்டம்

6—10—57 *காலை* 10 *மணிக்கு, சென்னை - பிராட்வே தெரு,* 4/88 *ஏ. என்னுள்ள* 11-*வது வட்ட தி. மு. க. பணிமனையில் தோழர் அன்பரசு தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.*

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

இதனை எதிர்த்திட வீரரே வாரீர்—அக். 13!